# ஜெபித்த தாய்மார்கள்



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: தீட்டுக்களிக்கும் தண்ணீர், ஜூன் 6, 1955, பத்தி எண் 33

நீங்கள் முதலாவது சமையலறைக்கு வருகிறீர்கள். சமையலறை, அங்கே தான் நீங்கள் புசிக்கிறீர்கள். நீங்கள் வந்து, புசித்த பிறகு, சபையைப் போன்று, நீங்கள் பெஞ்சின் மேல் அமர்ந்து, வார்த்தையை கேட்கிறீர்கள். “விசுவாசம் கேள்வியினாலே வரும், வார்த்தையைக் கேட்பதினால் வரும்.” அதன்பிறகு நீங்கள் வார்த்தையைப் புசித்த பிறகு, நீங்கள் அமர்ந்து அளவளாவும் அறைக்குள் (living room) வருகிறீர்கள், அது சபையிலுள்ள மற்றவர்களோடு கொண்டிருக்கும் ஐக்கியத்திற்குள் இருக்கிறது. அதன்பிறகு, **அந்தரங்கமாக இடம் யாதெனில் படுக்கையறை தான், அதனுள்ளே நீங்கள் பிரவேசித்து, முழங்கால்படியிடுகிறீர்கள், அங்கே தான் வழக்கமாக, நீண்ட காலத்திற்கு முன்பு, தாய்மார்களாகிய உங்களில் நிறைய பேர், உட்பிரவேசித்து, உங்கள் பிள்ளைகள் இரவில் வெளியி**

**லிருந்த போது, அவர்களுக்காக ஜெபம் பண்ணுவீர்கள்.** இன்றைக்கு உலகத்தோடுள்ள காரியம் அதுதான், அதோ அங்கே முற்காலத்தில், நீண்ட காலத்திற்கு முன்பு, தங்கள் பிள்ளைகளுக்காகவும் மற்றும் காரியங்களுக்காகவும் ஜெபித்த அந்தப் பழைமை நாகரீகமான தாய்மார்களுக்குப் பதிலாக, இன்றிரவோ அவர்கள் தங்கள் பிள்ளைகளோடு வெளியேயிருந்து, புகைப்பிடித்துக்கொண்டும், மது அருந்திக் கொண்டும், இவர்கள் செய்வது போன்று தொடர்ந்து செய்து கொண்டும் இருக்கிறார்கள். **ஆகையால் தான் இளம்பருவத்தினரின் குற்றச் செயல்களை நாம் பெற்றிருக்கிறோம்.** அவர்களுக்கு இருந்த நாகரிகத்தைக் காட்டிலும், நாம் அதிக நாகரிகம் கொண்டவர்களாக பேசிக்கொள்கிறோம். எனக்கு அது சந்தேகமாயிருக்கிறது. உ-ஊ. அப்படியானால் நிச்சயமாக அதைப் போன்று நடந்திருக்க மாட்டோமே. ஒரு காரியம் உண்மை. **அந்தப் பழைமை நாகரீகமான பாணி எனக்குப் பிடிக்கும்.**